மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Poems of the Pala.Muthuveerappanar – A Falcon View

Dr. S. Kodiyarasu

Assistant Professor, Department of Tamil, Government Arts College (Autonomous), Karur, India

Manuscript ID : **MT1A0006**

Volume : **1**

Issue : **1**

Month : **September**

Year : **2021**

Received: 19.08.2021

Revised: 23.08.2021

Accepted: 29.08.2021

Published: 05.09.2021

Pages : 58-72

ABSTRACT:

Prof. P. Muthuveerappan has written many poems under the pseudonym 'Ponnarasi'. His poems have appeared in literary brochures such as Ilanthamizhan, Kavitha Mandalam and Vanambadi and in various magazines such as Anandavikatan and Dinamani. He has written 28 books and sung kavi for more than 100 poets. Poets are always having concern on welfare of the people. It is natural that the influences of contemporary society are expressed in poetry. Poets always take the initiative in repositioning the ways in which barriers are broken without propping up contradictions. It is the virtue of poets not only to demolish insults but also to express the good things. In his poetry, the author expresses the view of society in many ways. From his three poetry books. First one admires novelty & antiquity. Second, he has praised the whole antiquity & in the third one he has invented a new form of poem with traditional pa. His 3 poetic books thus the authors personality & deep concern for society.

KEYWORDS:

Metaphor, Bioword, Cactus, Bleeding, Symbol of gift, Humane, Viyan Kodai

REFERENCES :

1. PL. Muthuveerappan, Mounachirukkal, Umayal Publishing, Annamalai Nagar, First Edision, 1978.
2. Professor PL. Muthuveerappan, Arasar Annamalai Kodai Villaka Malai, Umayal Publishing, Annamalai Nagar, First Edision, 2003.
3. Kavigar Muthuveerappan, Manitham Boomikku Varam, Umayal Publishing, Annamalai Nagar, First Edision, 2021.

பழ. முத்துவீரப்பனாரின் கவிதைகள் - ஒரு பருந்துப்பார்வை

முனைவர் ச.கொடியரசு,
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி(த), கரூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

பேராசிரியர் பழ.முத்துவீரப்பன் 'பொன்னரசி' எனும் புனைபெயரில் கவிதைகள் பல எழுதியுள்ளார். இளந்தமிழன், கவிதா மண்டலம், வானம்பாடி ஆகிய இலக்கியச் சிற்றிதழ்களிலும் ஆனந்தவிகடன், தினமணி ஆகிய பற்பல இதழ்களிலும் இவர் கவிதைகள் வெளிவந்துள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட கவியரங்குகளில் கவி பாடியுள்ளார். இன்று வரை மொத்தம் இருபத்து எட்டு நூல்கள் எழுதியுள்ளார். கவிஞர்கள் எப்போதும் மக்கள் நலனை மையப்படுத்தியே பாப்புனைவர். சமகாலச் சமுதாயத்தின் தாக்கங்கள் கவிதைகளில் வெளிப்படுவது இயல்பு. முரண்களுக்கு முட்டுக் கொடுக்காமல் தடைகளைத் தகர்த்தெறியும் வகைமைகளை எடுத்துரைப்பதில் கவிஞர்கள் எப்போதும் முன்நிற்பர். இழிவுகளை இடித்துரைப்பதோடு மட்டுமல்லாமல் நல்லன சொல்லலும் கவிஞர்களின் நற்பண்பு. சமுதாயத்தின் மீது ஆசிரியர் கொண்டுள்ள பார்வையைத் தன் கவிதைநூலில் பலவாறு வெளிப்படுத்தியுள்ளார். மூன்று கவிதை நூல்களில், முதல் நூலில் புதுமையையும் பழமையையும் (புதுக்கவிதை) போற்றும். இவர்தம் இரண்டாம் நூலில் முழுமையும் பழமையைப் (மரபுக்கவிதை) போற்றியுள்ளார். மூன்றாம் நூலில் மரபுப் பா வடிவில் புதுக்கவிதை புனைந்துள்ளார். மூன்றுநூல்களும் சமுதாயத்தின் மீது இவருக்குள்ள ஆழ்ந்த அக்கறையின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளதோடு, இவரது ஆளுமை திறமும் கவிதைத் தொகுப்புகளில் நன்கு வெளிப்பட்டுள்ளது.

கருச்சொற்கள்

உருவகம், உயிர்ச்சொல், கள்ளிகள், குருதிப்புனல், கொடையின் சின்னம், மனிதம், வியன்கொடை

முன்னுரை

பேராசிரியர் பழ.முத்துவீரப்பன் 'பொன்னரசி' எனும் புனைபெயரில் கவிதைகள் பல எழுதியுள்ளார். இளந்தமிழன், கவிதாமண்டலம், வானம்பாடி ஆகிய இலக்கியச் சிற்றிதழ்களிலும் ஆனந்தவிகடன், தினமணி ஆகிய பற்பல இதழ்களிலும் இவர் கவிதைகள் வெளிவந்துள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட கவியரங்குகளில் கவி

பாடியுள்ளார். இன்றுவரை இருபத்தெட்டு நூல்கள் எழுதியுள்ளார். அவற்றில், மௌனச்சிறகுகள் (1978), அரசர் அண்ணாமலை கொடைவிளக்க மாலை (2003), மனிதம் பூமிக்கு வரம் (2021) என்னும் மூன்று நூல்கள் கவிதை நூல்களாகும்.

கவிஞர்கள் எப்போதும் மக்கள் நலனை மையப்படுத்தியே பாப்புனைவர். சமகாலச் சமுதாயத்தின் தாக்கங்கள் கவிதைகளில் வெளிப்படுவது இயல்பு. முரண்களுக்கு முட்டுக் கொடுக்காமல் தடைகளைத் தகர்த்தெறியும் வழிமுறைகளை எடுத்துரைப்பதில் கவிஞர்கள் எப்போதும் முன்நிற்பர். இழிவுகளை இடித்துரைப்பதோடு மட்டுமல்லாமல் நல்லன சொல்லலும் கவிஞர்களின் இயல்பாகும். அவ்வகையில், நூலாசிரியரின் கவிதை நூல்களின் தன்மைகள் துலாக்கோலென நடுநின்று கவிதைகளின் உள்ளடக்கச் சிறப்புகளை இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

நூலாசிரியர் அறிமுகம்

பேராசிரியர் முனைவர் பழ.முத்துவீரப்பன் அவர்கள் இளங்கலையிலும் முதுகலையிலும் பருவந்தோறும் முதல் மாணவராகத் திகழ்ந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழில் (1974-1976) பல்கலைக்கழக முதல் தகுதிபெற்றுத் தங்கப்பதக்கம் வென்றவர். அண்ணாமலையிலேயே பணியில் சேர்ந்து பேராசிரியராக, துறைத்தலைவராக, இந்திய மொழிப்புல முதன்மையராக உச்சத்தைத் தொட்டவர். நல்லாசிரியரான இவர், அறுபதுக்கும் மேற்பட்ட பன்னாட்டு தேசியக் கருத்தரங்குகளில் பங்கேற்றுச் சீரிய ஆய்வுகளைத் தமிழுக்குத் தந்திருக்கிறார். பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் இருபத்தைந்து அறக்கட்டளைப் பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். பல்வேறு கருத்தரங்குகளில் தலைமை மற்றும் அமர்வுப் பொழிவுகள் பல நல்கியுள்ள இவர் வானொலியிலும் ஐம்பதுக்கு மேற்பட்ட பயன்மிகு பொழிவுகள் அளித்துள்ளார். கம்பன் கழக விழாக்கள் உள்ளிட்ட பல்வேறு இலக்கிய நிகழ்வுகளில் முந்நூறுக்கு மேற்பட்ட செறிவுமிகு சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

மௌனச்சிறகுகள்

இவர்தம் முதற் படைப்பு 'மௌனச்சிறகுகள்' என்னும் கவிதை நூலாகும். 1970-களில் காதல், சமுதாய சீர்திருத்தம், வர்க்கப்போராட்டம் போன்ற பொருண்மைகள் கவிதைகளாக உருவெடுத்தன. அக்காலகட்டம்; வானப்பாடிகளின் கவிதைகள்; இளமைக் காலத்தில் இளைஞர்களை வசியப்படுத்தியிருந்த காலகட்டமாகும். வானம்பாடிக் கவிஞர்களின் வழியில் கவிஞர் காதல் உணர்வுகளைக் கவிதையாக்கியுள்ளார்.

இறகு கொண்டு தெப்பம் செய்து அதைக் காதல் நதியில் மிதக்க விட்டுள்ளார். புதுக்கவிதை என்பது இலக்கியத்தின் சுருக்கெழுத்தென்பர். அவ்வகைப் புதுக்கவிதையை

ஒப்புக்கு எழுதாமல் ஒப்பீடு காட்டாமல் உணர்வில் கலந்த உள்ளத்தை உன்னதத்தை எண்ணத்தில் நிறைத்துக் கிண்ணத்தில் வழியும் அமுதாக வழங்கியுள்ளார்.

ஆசைப் புதுப்பானையில்

மோகநீர் தளும்பும்போது

கசிந்துவிட்ட

நீர்ச்சிலிர்ப்பு! (அவள்)[1]

இக்காதல் வரிகள் மானுடர் ஒவ்வொருவருக்கும் பருவகாலத்தில் எழும் மோக உணர்வைப் புலப்படுத்தி நிற்கின்றது. ‘கண்தரவரரூஉம் காம ஒல்லெரி’ என்பான் சங்கக்கவிஞன், அவ்வழியில் கண்வழி வளரும் காதல் உணர்வுகளைக் கவிஞரின் உள்ளம் உள்வாங்கிக் கவிதை மழையில் நம்மை நனைய வைக்கின்றது.

பார்வைப் பல்லக்குப்

பவனி வருகையிலே

யார் யார் மேனியிலோ

இடித்து நகர்கிறது![2]

இவ்வாறு கவிஞர் காதலைப் புதிய நோக்கில் பவனி வரச்செய்துள்ளார். காதற்பார்வையில் அழகு எப்பொழுதுமே விஞ்சி நிற்கும்; இவரது பார்வையில் கொஞ்சி நிற்கிறது.

சொருகி வைத்த முட்பார்வை

சுகமாகப் புரையோடிச்

சொப்பனத்தின் உட்புறத்தில்

சோபிதமாய் அழுகிறது! (பார்வை)[3]

காதல் கொண்ட உள்ளங்களுக்கு சோகம் கூட சுகம் தான். முட்பார்வையால் புரையோடிப் போன நிகழ்வு கூட இங்கு சுகமாகவே தென்படுகின்றது. கவிதைப்பிறப்புக் குறித்து,

சொல்லும் பொருளும்

புணர்ந்ததால் பிறந்த

கவிதைத்துண்டு![4]

எனக் குறிப்பிடுகின்றார். காதலுக்கும் கவிதைக்கும் புதிய உருவகம் கண்டவர். அதனால்தான் கவிதையின் பிறப்பை அழகுறக் காட்சிப்படுத்தியுள்ளார். கவிஞர் ஈரோடு தமிழன்பன், இவர்தம் மணிவிழா மலருக்கு எழுதிய வாழ்த்துக் கவிதையில்,

பதவி என்பது

நாற்காலி தேய்க்கும் இருகாலிகள்

பணி என்று எண்ணாமல்

பதினான்கு நூல்களை எழுதித் தந்த

பழ.முத்துவீ.

பாடமாக இருந்து

பாடம் நடத்துபவர்….[5]

என்று பேராசிரியர் முத்துவீரப்பன் அவர்களைப் பாராட்டியுள்ளார். அதற்கேற்ற வகையில் பேராசிரியருடைய கவிதைகளும் நமக்குப் பாடமாக அமைந்துள்ளன. அரசியல், இலக்கியம், சமயம் என அனைத்துத் துறைகளிலும் ஒருவரைப் பாராட்டுவது என்பது மோசமான வணிகமாகி விட்டது என்பதைக் கடுமையான வார்த்தைகளில் ஆசிரியர்,

வெளிச்சத்துக்கு நடுவே

நடக்கும்

விபச்சாரம்[6]

எனக் குறிப்பிட்டுள்ளார். சிறந்த கவிஞர், தான் வாழும் சமுதாயத்தைக் கூர்ந்து பார்ப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாயச் சீரழிவுகளைத் தம் கவிதை வரிகளால் புரட்டிப் போடவும் செய்வர். உண்மை அன்பில்லாமல் செய்யப்படும் இன்றைய திருமணங்கள் வியாபாரம் ஆகிவிட்ட காலகட்டத்தில் இணைசேரும் ஆணும் பெண்ணும் இயந்திர மயமாகி விட்டார்கள் என்பதையும் மக்களைக் காக்கும் கடமையை அரசாங்கம்

செய்வதில்லை என்பதையும் அரசு நூலகங்கள் நூல்களை வாங்கி ஆதரிப்பதில்லை என்பதையும் உள்ளடக்கி, எளிமையாகவும் செறிவாகவும் ஆசிரியர்,

எல்லாக் காலத்திலும் வெளிவரும்

சாதாரண வெளியீடுகள்

மக்கள் பதிப்பகங்கள் மலிவுப்பதிப்பாக

வெளியிடுகின்றார்கள் உங்களை,

அரசு நூலகத்தின்

ஆதரவு இல்லாதபோதும்! (குழந்தைகள்)[7]

எனச் சித்திரித்துள்ளார். நடப்பியலை மிக வேதனையோடு பதிவு செய்யும் இக்கவிதை உடம்பில் ஊசியேற்றுவதைப் போல இதயத்தில் வலியை ஏற்படுத்தி விடுகின்றது. சாதியெனும் நச்சரவே தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாய் நிற்கின்றது. சாதிக் கொடுமைக்கு எதிராக இவர் கவிதைகள் குரல் எழுப்பியுள்ளன.

காலம் காற்றாகி

சாதிக்கரையில்

தூக்கி எறிந்து விட்டது! (சாதிக்கரையில்…)[8]

இக்கவிதையில் காலம், காலன் உருவத்தில் சாதித்தீயை எட்டி உதைத்த நிகழ்வைக் காட்சிப்படுத்தியுள்ளமை உருகவைக்கின்றது. வெண்மணியில் பற்றிய சாதீய நெருப்பு பின்னரும் அணையாமல் நிற்பதை,

வெண்மணி ஆற்றின்

குருதிப்புனல்கள்

விழுப்புரங்குளத்தில்

வேறுவிதமாய்க்

கொப்புளித்தன (விழுப்புரமும் சமத்துவமும்)[9]

என்று சித்திரித்துள்ளார். பேராசிரியரின் சமுதாயம் குறித்த பருந்துப் பார்வை மௌனச் சிறகுகளுக்கு உயிரூட்டுவது புலனாகின்றது.

அரசர் அண்ணாமலை கொடை விளக்க மாலை

அரசர் அண்ணாமலை, ஆன்மநலம் சிறந்தோங்கிய தில்லையில் கொடைநலம் சிறக்க வைத்தவர்;. தமிழ்மொழிக்காகவும் தமிழிசைக்காகவும் தொண்டு செய்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என்னும் கல்விக்கோயிலைத் தில்லையில் நிறுவியவர். அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டலைவிட ஏழைக்கு எழுத்தறிவித்தலே சிறப்புடையதாகும் என்றான் பாரதி. அண்ணாமலை அரசரோ அன்னசத்திரமும் வைத்தார். ஆலயமும் நாட்டினார். கல்வியில் சிறப்புடையோரைக் கொண்டு வந்து பணியமர்த்தி எழுத்தறிவிக்கும் பணியையும் செம்மையாகச்; செய்தார். வள்ளல் அண்ணாமலையார் குடியையே வாழ்த்திப் பாடும் வானம்பாடியான இவர் அவ்வள்ளல் பிறந்த கானாடுகாத்தானையும் வணங்கத் தவறவில்லை.

கானாடு காத்தானைக்

கையெடுத்து வணங்குகிறேன்

கோன் அண்ணா மலைவள்ளல்

குடிபிறந்த காரணத்தால் [10]

என்கிறார். அண்ணாமலை அரசர் கிள்ளிக் கொடுக்கவில்லை. அள்ளியும் கொடுக்கவில்லை. ஏன் அளந்துமே கொடுக்கவில்லை. அனைவரையும் அள்ளிச்செல்க என விட்டுவிட்டார். கையளவு இதயத்தில் கடலளவு கொடைவைத்தவரின் புகழ் சூரியன் சந்திரன் உள்ள அளவும் நீடித்திருக்கும் என்பதை,

எத்தனை பெரிய மனம்

எழில் வானம் தோற்கும் வனம்…

கையளவு இதயத்தில்

கடலளவு கொடை வைத்தாய்…

கத்து கடல் காற்று நிலம் நிலவு வானம்

காலைவரும் செம்பருதி உள்ள மட்டும்

வித்தகரின் கொடைப்புகழும் விளங்கி நிற்கும்[11]

என்றெல்லாம் விவரிக்கின்றார். அடையாறு ஆலமரத்தைவிட திருவேட்களத்து கற்பகதருவான அண்ணாமலை அளவிட முடியாத அளவிற்கு விரிந்து பரந்தது.

இந்நிறுவனம் தில்லையில்; முளைத்து உலகம் முழுதும் கிளை பரப்பி விழுதுவிட்டுக் கல்வி நிழல் தருகின்றது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைக் கண்ணாரக் கண்டுகளித்து அல்லும் பகலும் ஆனந்த நடராசர் ஆடுவதாகக் கற்பனை செய்து போற்றினார் கவிமணி. அவரை அடியொற்றி தில்லைப் பதியில் ஒருகடவுள் ஆடிக்கொண்டிருக்கிறார். இன்னுமொரு கடவுள் தூங்கிக் கொண்டிருக்கிறார். ஏன் தெரியுமா. மக்களுக்கு வாழ்வுதர கானாடு காத்தானில் தோன்றிய அண்ணாமலை அரசர் இருப்பதால் திருமால் தூங்கப் போய்விட்டார். அண்ணாமலையாரின் அறப்பணிகளைக் கண்ட மகிழ்ச்சிப் பெருக்கால் தூக்கிய காலைக் கீழே வைக்கவும் மறந்து தில்லையிலே இறைவன் ஆடிக்கொண்டேயிருக்கிறான் என்கிறார் கவிஞர். இக்கவின்மிகு கற்பனைகளை,

'நான் எதற்கு எனத் திருமால் தூங்கப் போனார்'

என்றும்

ஐயாவின் கலைக்கழகம் கண்டு கண்டு

ஆனந்தத் திருக்கூத்தன் நடஞ்செய் கின்றான்[12]

என்றும் விவரித்துள்ளார்.

தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றில் அண்ணாமலை அரசரின் புகழ் தன்னிகரில்லாதது. அண்ணாமலை அரசரை நினைக்கும்போது கவிஞர் உள்ளம் புளகாங்கிதம் அடைகிறது. அறிவுப் பரவலுக்கு அண்ணாமலையிட்ட வித்து உயர்வுடையது, அது எவ்வாறெனில்,

திருவேட்களம் நாடித் தேவன் வந்தாய்!

தென்னாட்டார் கொண்டாடும் தெய்வம் ஆனாய்!

கருடன்இங்கே வட்டமிடக் கண்டு கொண்டாய்!

காடுவெட்டி நாடாக்கிக் கழகம் கண்டாய்!

இருபத்து ஐந்துஇலட்சம் அள்ளித் தந்தாய்!

எளியமக்கள் வாழ்வுயர எல்லாம் தந்தாய்!

ஒரு அண்ணா மலை தீபம் ஏற்றி வைத்தாய்!

ஒளிபெற்ற குடிஇலட்சம்! கோடி! ஐயா![13]

என்று பூரிக்கிறார்.

திரு அண்ணாமலையில் தீபம் ஏற்றுகின்றனர். அதனைப் பல இலட்சம் மக்கள் காண்கின்றனர். ஆன்ம ஒளி பெறுகின்றனர். அண்ணாமலை நகரிலே அரசர் கல்வித் தீபம் ஏற்றியதனால் பல இலட்சம் குடும்பங்களில் செல்வநலம் என்னும் விளக்கேற்றப்பட்டுள்ளது.

கடவுள் புகழை ஒரு தட்டிலும் அண்ணாலை அரசர் புகழை ஒரு தட்டிலும் இருக்குமாறு ஒரு தராசில் வைத்து நிறுத்தால் கடவுள் தட்டு மேலேறும்; அரசர் தட்டு தாழ்ந்து நிற்கும் என்கிறார் கவிஞர்.

கல்வி விளக்கேற்றி வைத்துக்

கடவுள் எனச் சிறந்தாய் நீ

படைப்புக் கடவுளை உன்

பக்கத்தில் வைத்தாலும்

எடைகுறையும் என்பேன் நான்[14]

என்று கொடைப்புகழை உயர்தியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் கவிச்சக்கரவர்த்தி, புதுக்கவிதையின் தலைமைப் புதல்வன் பாரதியின் வைர வரிகளை அடியொற்றி,

வெள்ளிப் பனிமலையில் வெற்றி பொறிப்பார்

மேலைக் கடல்நடுவே கப்பல் விடுவார்

பல்கலையின் துறையனைத்தும் கோயில் செய்தார்

பாரதத்து மக்களெல்லாம் பயிலச் செய்தார் [15]

என்று அண்ணாமலை அரசரைப் புகழ்ந்துள்ளார். இமயமே விஞ்சும் அளவிற்குப் புகழுடையவர். அண்ணாமலை அரசர் என வாழ்த்துப்பா இசைக்கிறார். கவிஞர், அண்ணாமலை அரசரோடு பாரதியை ஒப்பு நோக்குகிறார். இருவருமே தலைப்பாகை அணிந்தவர்; பாரதியின் தலைப்பாகை தமிழின் சின்னம்; ஆனால் அண்ணாமலையாரின் தலைப்பாகையோ 'கொடையின் சின்னம்' எனக் குறிப்பிடுகின்றார்.

வெல்லு தமிழ்த் தலைப்பாகை பாரதியார் போல்

வியன்கொடையின் தலைப்பாகை எங்கள் வேந்தர் [16]

என்பது கவிஞரின் சித்திரம்.

ஏழை எளிய மக்களுக்கு எட்டாக் கனியாக இருந்த கல்வியை கிட்டச் செய்தவர் கோன் அண்ணாமலை. பல்கலை சமைத்துக் கள்ளிகளை முல்லைகளாக்கியவர். இதனை,

கள்ளிகளை முல்லைகளாய்க்

கல்வியினால் பூக்கவைத்தாய்! [17]

கள்ளிச் செடிகயை முல்லைகளாய் மாற்றியமைத்தது மட்டமல்லாமல் விறகுகளாய் இருந்தவரை வீணைகளாய் மாற்றிய பெருமையும் அண்ணாமலை அரசரையே சாரும் எனக்குறிப்பிடுகின்றார். இவ்வாறு, உயர்நிலையினருக்கே கல்வி என்ற நிலையைமாற்றி எல்லோருக்கும்; கல்வி பெற வழியமைத்துத் தந்தவர் அண்ணாமலை அரசர்.

உயர்த்தப்பட்டவரால்

உச்சரிக்கப்பட்டு வந்த

வேதங்கள் போல

விளங்கிவந்த கல்வியினை

நாட்டுப் பாடல்களாய்

நாட்டுக்குத் தந்தவர்நீர்! [18]

என்று அடித்தட்டு மக்களுக்குக் கல்வி தந்த சிறப்பைப் போற்றியுள்ளார்.

அண்ணாமலை அரசரே வாடிக்கிடந்த தமிழிசை வளர்ச்சிக்குப் புதிய இரத்தம் பாய்ச்சியவர். அன்போடு அரவணைத்து அசைச் சொல்லை உயிர்ச்சொல்லாக்கியவர் இதனை,

அரவணைப்பார் இல்லாமல்

அசைச் சொல்லாய் இருந்த இசை

உயிர்ச் சொல்லாய் உயர்வதற்கு

இசைப்பள்ளி திறந்தாய் நீ! 19

என்கிறார்.

இசையையும் தமிழையும் இருகண்களெனப் போற்றிய அண்ணாமலையாரின் புகழ் கவிஞரின் உள்ளப் பொய்கையில் அன்றலர்ந்த தாமரையாய்க் காட்சி தருகிறது.

பார்காத்தாய்! பலகோடிப் பொருள் கொடுத்தாய்!

பல்கலையைத் தோற்றுவித்து நிலைத்து விட்டாய்!

சீர்காத்தாய்! தெய்வநலம் சிறக்க வைத்தாய்!

திருப்பணிக்கே வாழ்வுதந்து தெய்வம் ஆனாய்!

பேர்காத்தாய்! முத்தையவேள்ப் பெரியோன் பெற்றாய்!

பெருங்கொடையை வாழவைத்துப் பெருமை மிக்காய்!

நீ காத்தாய் எமையெல்லாம்! நெஞ்சில் உள்ளாய்!

நிலை அண்ணாமலை வள்ளால் நேசிக்கின்றோம்! [20]

என்கிறார்.

இவரைப்பற்றி, மொழியியல் அறிஞர் செ.வை.சண்முகம் அவர்கள், 'பல நேரங்களில் தமிழில் அண்மையில் வெளிவந்த நூல்களைப் பற்றி என்னிடம் கூறுவார். நிறைய நூல்களை விலைக்கு வாங்கிப் படிக்கும் பழக்கம் உடையவர். அவர் வீட்டில் பெரிய நூலகமே உள்ளது. எனவே, அவர் ஒரு பெரிய படிப்பாளி என்பது ஊரறிந்த உண்மை. நான் பணிஓய்வு பெற்ற பிறகு மொழியியல் நோக்கில் இலக்கியத் திறனாய்வு மேற்கொண்டதால் அவருடன் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. பல பாடல்களுக்கு மொழியியல் திறனாய்வு நோக்கில் கட்டுரை எழுதியபோது, அந்தக் கட்டுரைகளின் கையெழுத்துப் படியை அவரிடம் கொடுத்துப் படித்துக் கருத்துரைக்குமாறு கேட்டிருக்கிறேன். அதை என்னுடைய நூலின் முன்னுரையிலும் பதிவு செய்துள்ளேன். அவருடைய பல நூல்களைப் படித்துப் பாராட்டியிருக்கிறேன். குறிப்பாக அவருடைய ராஜா.சர்.அண்ணாமலைச் செட்டியார் நாண்மங்கல வாழ்த்துப் பாடல்களைச் சாஸ்திரி அரங்கில் கேட்டவர்கள் பலரும் மனந்திறந்து பாராட்டியதை நேரில் கண்டு ரசித்திருக்கிறேன். அது அவரை ஒரு படைப்பாளியாக குறிப்பாக நல்ல கவிஞராகப் புலப்படுத்துகிறது' எனக் குறிப்பிட்டுள்ளதை ஈண்டு நினைவு கூர்வது பொருத்தமாகும்.

இராசா முத்தையவேள் கட்டாய இந்தியை எதிர்த்துக் களத்தில் இறங்கியவர். 1938இல் கட்டாய இந்தியை எதிர்த்துச் சென்னை தங்கசாலைத் தெருவிலிருந்து கோட்டைவரை ஓர் ஊர்வலம் நடைபெற்றது. அதில் தமிழ்க் கொடியைத் தாங்கிக்கொண்டு, ஊர்வலத்தின் முன்னால் நின்று முழுத் தொலைவையும் நடந்தே வந்தவர் முத்தையவேள். அதனாற்றான் பேறறிஞர் அண்ணா அவர்கள் கொடியைக் கையிலேந்தி முதலில் நடந்த உயர்ந்த மனிதர் எனப் புகழாரம் சூட்டினார். மேன்மையானவர் - உயரமானவர் என இருபொருளும் படும்படியாக உயர்ந்த என

அண்ணா கூறியுள்ளார். இவர் சென்னை மாநகரின் முதல் மேயராக இருந்து அரும்பணிகள் செய்துள்ளார். இதனை நூலாசிரியர்,

முத்தமிழின் வளர்ச்சிக்கு வாழ்வு தந்தார்

மொழியுணர்வுப் போர்க்களத்தில் முதலில் நின்றார்

சித்திரம்போல் அழகொளிரும் சென்னை தன்னின்

சீர்மிகுந்த முதல் மேயர் இவரே ஆவார் 21

எனும் பாடலடிகள் வாயிலாக ஓவியப்படுத்தியுள்ளார். தமிழினமும் தமிழும் செழித்தோங்க வகைசெய்த முத்தையவேளின் புகழ் சிறப்பிற்குரியதாகும்.

மனிதம் பூமிக்கு வரம்

'மனிதம் பூமிக்கு வரம்' என்னும் தலைப்பில் சத்தான ஐம்பது கவிதைகளை ஆசிரியர்; படைத்துள்ளார். நூலாசிரியரின் ஐம்பதாண்டு காலக் கவிதைப் பயணத்தில் இந்நூல் மற்றுமொரு மைல்கல் எனலாம். கல்லூரிக் காலத்தில் மரபுப்பாடலால் தேர்வு எழுதியவர், கவியரங்குகள் பலகண்டவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கொண்டாடிய, விழாக்கள் பலவற்றில் கவிதை புனைந்த, காவியக் கவிஞரின் புதுமையும் மரபும் உள்ளத்திலிருந்து ஒருங்கே பிறக்கும்ஆற்றல் நன்கு வெளிப்பட்டுள்ளது. பூமிக்கு வரவாவோம் எனத்தொடங்கி மகிழ்ச்சி ஈறாக அறுபதுகளின் அனுபவத்தை அரும்புக்கவிதையாக்கிக் குறும்புத் தலைப்புகளில் கூட்டமாய் நட்டுவைத்துள்ளார். நட்டுவைத்த கவிதையெல்லாம் வாழ்க்கைச் சாலையில் வரிசையாய்.

கேட்பதும்

கேட்காமல் போவதும்

உம் விருப்பம்.

கேடுகள்

இவையெனச் சொல்வது

என் குணம். [22]

எனத், தன்குணமாம் நற்குணத்தை இக்கவிதை நூலில் வெளிப்படுத்துகிறார். நூலாசிரியர் அனைத்துவகையான பொருண்மைகளையும் பாடுபொருளாகக் கொண்டு கவிதைகளைப் புனைந்துள்ளார்.

அகக்கண்ணின் வழிதிறக்கும் புதிய புத்தகமாகிறார். பதவிக்காலத்தில் ஈரமனத்தோடு நல்லன செய்ய வேண்டும் எனச் சொல்கிறார். கண்ணில் நூறு கவிதை தவழ்ந்தாலும் மனதில் இளமை வேண்டும் எனக் கசிந்துருகுவது சிறப்பு. கண்திறக்க இறைவனிடம் வேண்டுதல் வைக்கும் போதும்கூட, முத்தமிழையே முதன்மைப்படுத்தியிருப்பது இவர்தம் தமிழ் உணர்வைப் புலப்படுத்துகிறது.

இயற்கை வளமெல்லாம்

எந்நாளும் பெற்றோமே!

தயவுசெய்த இறைவனுக்குக்

கட்டணங்கள் தந்தோமா? [23]

என்ற வரிகளில் இயற்கையே இறையாக இருப்பதை எடுத்துக்காட்டி வாழும் வழி சொல்கிறார். விழிமொழி என்பது பல மொழி ஆகும் சூழலுக்கு ஏற்ப அது சொல்வது மாறும் என இளமையிலும் முதுமையிலும் இனிக்கும் காதலை இன்னிசைப் பாமாலை பாடியுள்ளார்.

ஊடல்செய்து கூடிநின்று

மகிழ்ந்திருப்ப தல்ல.

ஊடல்கூடல் இல்லாமல்

ஒன்றிவிடும் காதல். [24]

என்னும் கவிதை வரிகள், கவிஞரின் சொந்த அனுபவத்தின் வெளிப்பாடோ, என்று வாசிப்பவரை எண்ணவைக்கிறது. உள்ளத்தால் ஒன்றுவதே உண்மைக்காதல் என வெடுக்கெனச் சொல்லிவிடுகிறார். நிகழ்காலத்தில் கொரோனா உலகமக்களை அச்சுறுத்தும் மாய அரக்கனாக உருமாறியுள்ளது. ஆசிரியர் கொரோனா குறித்தும் பாடல் புனைந்துள்ளார்.

மெய்ப்பாடுகள் சிலவற்றை இயல்புநிலையில் எடுத்தியம்பியிருப்பது மிகச்சிறப்பு. முத்தாய்ப்பாக அமைந்துள்ள நகையும் அழுகையும் ஆசிரியரின் எண்ணஓட்டத்தின் வெளிப்பாடாய் மலர்ந்துள்ளன. தலைப்பைச் சூட்டுவதில் இருந்து கவிதைகளைத் தெரிவுசெய்து அச்சிடும்வரை நேர்மறைச் சிந்தனைகளை மட்டுமே சிந்தித்துப் பார்த்துள்ளவர், ஒருவரின் சுயம் மட்டுமே வாழ்க்கைப் பாதையைச் செப்பனிடும் கருவி என்கிறார்.

சுயதிறனை வளர்க்காமல் உயர்வே இல்லை.

சுயதொழிலைச் செய்பவர்க்குத் தாழ்வே இல்லை.

சுயம்போற்றச் சுகம் சேரும் சுயமாய் வாழ்க! [25]

ஆன்மீகம் தொடங்கி, காதலைத்தொட்டு, இனிக்கும்தமிழ் முதல் கொள்கைப்பற்றாளர்வரை தம்கவிதைக்குள் இவர் அடக்காத பொருண்மையே இல்லை எனலாம். அவ்வகையில், தாமரைப்பூ கால்முளைத்த குட்டிப் பாப்பாவின் குறும்புச் செயல்களைக் குறுங்காவியமாக்கியுள்ளார்.

குட்டிப் பாப்பா வீட்டைச் சுத்திக்

குதூகலத்தை நிறைக்குமே!

தாமரைப்பூ கால் முளைத்துத்

தத்தித் தத்தி நடக்குதே! [26]

என வர்ணித்துள்ளார். ஆண்பிள்ளை பிறந்தால் கொண்டாடுவதும் பெண்பிள்ளை பிறந்தால் வருந்துவதுமாக வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக்கூடாது எனத் திட்டவட்டமாக எடுத்துரைக்கிறார்.

ஆண்பிள்ளை என்றால்

கொண்டாடும் மாயமென்ன?

ஊனுருகப் பெற்றவரில்

உயர்வென்ன? தாழ்வென்ன? [27]

என்கிறார் கவிஞர். ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்ற பாரதி கருத்தை நெற்றிப்பொட்டில் அடிப்பது போல விவரித்துள்ளார். காந்தியடிகள், அண்ணாமலை அரசர், ஜீவா, வ.சுப. மாணிக்கம், கண்ணதாசன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம் போன்ற புகழ்மிக்க மனிதர்களுக்குக் கவிதைப் பாமாலை சூட்டியுள்ளார்.

கருவினிலே தமிழுடையான் கண்ணதாசன்.

பகுத்தறிவுப் பள்ளியிலே பாடம் கேட்டான்.

ஆழிமழைக் கண்ணனுக்குத் தாசன் ஆனான்.

மகுடம்வைத்துப் பாடுவதில் மன்னன் ஆவான்.

கண்ணதாசன் பாடல்எல்லாம் வாழ்க்கைப் பாடம். [28]

எனக் கண்ணதாசனின் வாழ்வியலை ஐந்து விரல் மந்திரமாய் அழகோவியமாக்கியுள்ளது உள்ளத்தில் இருந்து உதித்த உண்மை வரிகள் ஆகும்.

முடிவுரை

சமுதாயத்தின் மீது ஆசிரியர் கொண்டுள்ள பார்வையைத் தன் கவிதைநூல்களில் பலவாறு வெளிப்படுத்தியுள்ளார். முதல் நூலில் புதுமையையும் பழமையையும் (புதுக்கவிதை) போற்றும், இவர்தம் இரண்டாம் நூலில் முழுமையும் பழமையைப் (மரபுக்கவிதை) போற்றியுள்ளார். மூன்றாம் நூலில் மரபுப் பா வடிவில் புதுக்கவிதை புனைந்துள்ளார். மூன்றுநூல்களும் சமுதாயத்தின் மீது இவருக்குள்ள ஆழ்ந்த அக்கறையின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. இவர்தம் ஆளுமை திறம் கவிதைத் தொகுப்புகளில் நன்கு வெளிப்பட்டுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. பழ.முத்துவீரப்பன், மௌனச்சிறகுகள், உமையாள் பதிப்பகம், அண்ணாமலை நகர்;, மு.ப.1978, ப. 7
2. மேலது, ப. 11
3. மேலது, ப. 13
4. மேலது, ப. 16
5. மேலது, ப. 21
6. மேலது, ப. 22
7. மேலது, ப. 25
8. மேலது, ப. 26
9. மேலது, ப. 27
10. மேலது, ப. 31
11. பேராசிரியர் பழ. முத்துவீரப்பன், அரசர் அண்ணாமலை கொடை விளக்க மாலை, உமையாள் பதிப்பகம், அண்ணாமலை நகர்;, மு.ப.2003, ப.4
12. மேலது, ப. 6
13. மேலது, ப. 12
14. மேலது, ப. 28
15. மேலது, ப. 16
16. மேலது, ப. 39
17. மேலது, ப. 19

18. மேலது, ப. 8
19. மேலது, ப. 9
20. மேலது, ப. 13
21. மேலது, ப. 31
22. மனிதம் பூமிக்கு வரம், கவிஞர் முத்துவீரப்பன், உமையாள் பதிப்பகம், அண்ணாமலை நகர்;, மு.ப.2021, ப.6
23. மேலது, ப. 2
24. மேலது, ப. 14
25. மேலது, ப. 98
26. மேலது, ப. 28
27. மேலது, ப. 60
28. மேலது, ப. 94 ரசு.

துணைநூற்பட்டியல்

1. பழ.முத்துவீரப்பன், மௌனச்சிறகுகள், உமையாள் பதிப்பகம், அண்ணாமலை நகர், மு.ப.1978.
2. பேராசிரியர் பழ. முத்துவீரப்பன், அரசர் அண்ணாமலை கொடை விளக்க மாலை, உமையாள் பதிப்பகம், அண்ணாமலை நகர், மு.ப.2003.
3. மனிதம் பூமிக்கு வரம், கவிஞர் முத்துவீரப்பன், உமையாள் பதிப்பகம், அண்ணாமலை நகர், மு.ப.2021.